ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சங்கத் தமிழில் கலைஞரின் கவித்திறனும் தமிழாளுமையும்

**முனைவர் ச.பிரியா**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,**

**வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,**

**பல்லாவரம், சென்னை – 117.**

**ஆய்வு நோக்கம் :**

கலைஞரின் கைவண்ணத்தில் உருவான ’சங்கத் தமிழ்’ என்னும் இந்நூலில் இடம்பெற்றுள்ள அக இலக்கியப் பாடல்களின் சிறப்பு , அப்பாடல்களை விளக்க கலைஞர் அவர்கள் கையாளும் கவிதை நடையின் சிறப்பு, அவருடைய தமிழாளுமைக் குறித்து விளக்கியுரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**ஆய்வுச் சுருக்கம் :**

’சங்கத் தமிழ்’ என்னும் இந்நூலில் மொத்தம் நூறு தலைப்புகளில் கவிதைப் படையல் அரங்கேறியுள்ளது. அவற்றுள் முதல் தொண்ணூறு தலைப்புகளில் ஐந்திணை காதலொழுக்கம் உணர்த்தும் அகப்பாடல்களும் அதனூடே புற இலக்கியப் பாடல்களை எடுத்துரைத்தும், அடுத்ததாக பத்து தலைப்புகளில் ‘கைக்கிளை’ (ஒருதலைக் காதல்) என்னும் பிரிவிலான பாடல்களும் இடம் பெற்றுள்ளன. இவற்றிலிருந்து ஒரு சில அகப்பாடல்கள் மட்டும் இக்கட்டுரையில் விளக்கியுரைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் : நற்றிணை : 55 -** காம்புதலை மணந்த, கல் அதர்ச் சிறுநெறி, உறுபகை, பொறி,ஆகம், அறுகாற் பறவை, இனையையோ, அல்லாது, சாந்தம், ஞெகிழி

**நற்றிணை: 172-** விளையாட்டு ஆயம், காழ்முளை, தீம்பால், காழ் முளை, நுவ்வை, புன்னை, நாணுதல், நும்மோடு நகையே.

**அகநானூறு : 262-** அன்னிஞெமிலி, கோசர், திதியன், குறும்பி நாடு,பகடு, கண் களைந்து , கலத்தும் உண்ணாள், வாலிதும் உடாஅள், சினத்தின் கொண்ட படிவம் மாறாள்.

**ஐங்குறுநூறு : 242-** வெறிப்பத்து, அறியாமை, வெறியாட்டு, அருந்துயர், சேய்மலை, நாடன் செய்த நோயே, வேலன், நாடன், முருகென, மொழியும், அம்ம நோயே, அன்னை.

**முன்னுரை :**

தமிழையே தமது மூச்சாகக் கொண்டு, "தமிழ் வாழ நாம் வாழ்வோம்! தமிழ் தாழ நாம் தாழ்வோம்!'' என்னும் உணர்வுடன் தமிழிற்குத் தொண்டு செய்வதையே தமது குறிக்கோளாகக் கொண்டு தமிழிற்குப் பெருமை சேர்க்கும் பல பணிகளை முன்னெடுத்து அதனை நிறைவேற்றியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்பதை நாடறியும்; தமிழக அரசியல் வரலாற்றில் மட்டுமல்ல தமிழிலக்கிய வரலாற்றிலும் முத்திரைப் பதித்தவர் காவிய கலைஞர் கருணாநிதி அவர்கள்; இவருடைய தொல்காப்பியப் பூங்கா, சங்கத் தமிழ், குறளோவியம், திருக்குறள் கலைஞர் உரை, கலைஞரின் கவிதைகள், சிலப்பதிகாரம், ரோமாபுரி பாண்டியன், பொன்னர் சங்கர், பாயும் புலி பண்டாரக வன்னியன், தென்பாண்டிச் சிங்கம், புதையல் , நெஞ்சுக்கு நீதி, மனோகரா, வண்டிக்காரன் மகன், உதய சூரியன் , இனியவை நாற்பது என்று இவருடைய தமிழிலக்கியப் படைப்புகளைக் கூறிக் கொண்டே போகலாம். இலக்கியம் மட்டுமல்ல இலக்கணத்திலும் ஆய்ந்து கரைக் கண்டவர் என்பதற்கு 'தொல்காப்பியப் பூங்கா' சான்று பகரும். இவரது படைப்புகளையெல்லாம் காணும் போது இவர் இளைப்பாறும் போதெல்லாம் இலக்கியம் கனமடைகிறது; அதனை வாசிப்பவர் மனமோ இலகுவாகிறது என்றால் அது மிகையல்ல என்பதை அறியலாம்.

அறிஞர் அண்ணாவிற்கு பிறகு அவரை அடியொற்றிச் செயற்பட்டு பல வகையில் பல துறையில் மாற்றமும் வளர்ச்சியும் கண்ட முன்னோடி கலைஞராவார்.

**சங்கத் தமிழ்:**

தமிழிலக்கியத் துறையில் 'சங்கத் தமிழ்' என்னும் நூல் சங்க கால இலக்கியத்தின் பொருள் சுவையை இருபதாம் நூற்றாண்டின் இனிய தமிழில் இசைத்திட வழி செய்தது. சங்கப் பனுவலாம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் தொகுப்பிலிருந்து நூறு பாடல்களைத் தேர்ந்தெடுத்து அப்பாடல்களின் சாரத்தைத் தலைப்பாக வைத்து, அப்பாடல் உருவானச் சூழலைக் கவிதை நடையில் எடுத்துரைத்து, பாடல்களை விளக்க சுவையூட்டும் இனிய மொழிநடையும்,

இடையிடையே கவிதைக்கு இனிமையைச் சேர்க்க எடுத்தாளும் உவமை நயங்களும், சிறுகதைகளும், வரலாற்றுப் பின்புலங்களும் கலைஞரின் நுண்மாண் நுழைப்புலத்தையும் ஆழ்ந்து அகன்ற தமிழிலக்கிய அறிவையும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

தமிழரின் அகமரபும் புறமரபும் மாறாது சிறப்பான கவிதை நடையழகுடன் தொகுத்தளித்து, கலைஞருக்கே உரிய உத்தி முறைகளோடு அவற்றை விளக்கியுரைக்கும் கவிதை நடையும், படிப்போரைக் கவர்ந்திழுக்கும் வண்ண வண்ணப் படங்களும், படித்தும் சுவைத்தும் இன்புறத்தக்க வகையில் சிறப்புடன் படைக்கப்பட்டுள்ளன.

**சங்கத்தமிழும் கலைஞரும்:** கதிரவன் போல ஓயாமல் உழைத்த கவிபெருமகனார் கலைஞர் அவர்களின் கவித் திறனுக்கும் கற்பனைப் பெருக்கிற்கும் 'சங்கத் தமிழ்' ஒன்றே சான்று பகரும். இச்சீர்மிகு சங்க இலக்கியத்தைப் படிக்கும் பொழுது தன் மனம் அடைந்த மகிழ்ச்சியை எடுத்துரைக்கும் கலைஞர்,

**"கடல் குளித்து முத்தெடுக்கும் போதும்,**
**கனிகள் வெட்டிப் பொன் குவிக்கும் போதும்,**
**களிப்பு துள்ளும் உள்ளத்தைப் போல – இந்தக்**
**கலைஞனது உள்ளமுமே துள்ளுவது உண்மை "[1]**

**(1.சங்கத்தமிழ், கலைஞர் மு.கருணாநிதி, ப.2)** கருவூலப் பொருள் கூட அள்ள அள்ளக் குறையும்! சங்கக் கவிப்பெரியோர்களின் கற்பனையோ அகழ்கின்ற ஊற்றாக நிறையும்! என்று சங்கத் தமிழின் சிறப்பை ஒப்பிட்டுரைக்கும் உத்திமுறையை இந்நூல் முழுமையும் காணலாம். கலைஞரின் கவிச்சுவையினையும் தமிழாற்றலையும் கண்டு வியந்து அவரது மொழிநடையினை உணரும் பொழுது,

**கன்னித் தமிழே! கன்னியென உன்னை நினைத்து**
**இக்கலைஞன் வர்ணிக்கும் திறத்தை என்னவென்று**
**சொல்வேன் யான் ! காவிய கலைஞனும் உன்**
**காதலனாகி போனானடி இன்பத் தமிழே!**

**என்று சங்கத் தமிழைக் கற்கும் நம்மையும் கவிஞனாக்கிய திறம் கலைஞருக்கே யுரியது.**

**"தும்பை மலர் மாரியெனப் பொழிவது போல்**
**துறவிகளின் வெண்தாடி, தரையளவு நீண்டது போல்**
**தூய நல்லருவி வழிந்தோடும் சுனையொன்றில்**
**தோகையவள் நீராடித் துள்ளி யோடி துகில்**
**நனைத்த காரணத்தால் கட்டழகு உடல் முழுவதும்**
**கண்ணாடிப் பெட்டிக்குள் இருப்பது போல் காட்சி தந்தாள்;**
**அவ்வேளை கண்டயர்ந்தான் ஒரு காளை!"[2]**

(2.சங்கத் தமிழ், மேலது, ப.128) என்று இளம்பெண்ணொருத்தியை வருணிக்கும் விதம் கலைஞரின் காதல் திறனை எடுத்துக்காட்டும்.

**"சிலந்திவலை இழையெடுத்து நெய்திட்ட சேலை எழில்**
**சிந்த அவளுடுத்தி எறிகின்றாள் விழிவேலை!**
**வாழைத் தண்டெடுத்து வடிவமைத்த தொடையினிலே**
**தாழை மலர் நிறமெடுத்துத் தடவியது யாரோ?**
**சந்தன வண்ணத்து மெழுகு கொண்டு – இந்தச்**
**சுந்தரச் சிற்பத்தைப் படைத்திட்ட இயற்கைக்கு,**
**கோடிப் பொன் பரிசாகக் கொட்டிக் கொடுத்தாலும் அப்பரிசு;**
**மூடித்திறக்கும் அவள் இமையிரண்டின் அழகுக்கு ஈடாமோ?"[3]**

(3. மேலது, ப.129) என்று கட்டழகி ஒருத்தியின் ஒட்டுமொத்த அழகையும் இளங் காளையாய் நின்று கருகரு விழியின் முன் காட்சிப்படுத்தும் கலைஞரின் காதல் கவிக்குத்தான் ஈடேது! காதல் கவிஞனே! உன் காதலறம் பாட எமக்குத்தான் திறனேது?

சங்கப்பாட்டில் சிந்தையால் மூழ்கிய முத்தமிழறிஞர், அதன் அக புறப் பாடல்களின் இன்புறுச் சுவையினை அழகுற கவிதை வடிவில் வடித்திருப்பது இனிமையுடையது; அதனடிப்படையில் சங்கக் கடலிலிருந்து சில முத்துக்களைச் சரந்தொடுத்து அணிந்து மகிழ்வோம்! வாருங்கள்!

**தோழியின் அறிவுத் திறன் :**

சங்க இலக்கியத்தில் அக இலக்கியத்தின் உயிர்ப்பு நாடியாக திகழ்பவள் தோழி; அவள் தலைவன் தலைவி என்னும் இரு கரைகளை இணைக்கும் பாலமாகச்

செயல்படுகிறாள்; களவுலகக் கடலில் தலைவியின் நெஞ்சம் தடுமாறும் போதும் தலைவனின் நெஞ்சம் காதலின் மயக்க நிலையிலிருந்து சரியான முடிவு எடுக்க முடியாத நிலையிலும் தோழி சிறந்த அறிவுச் சுடராக இருந்து செயல்பட்டு இருவரின் காதல் வாழ்வினை இல்லற வாழ்வாக மாற்ற அரும்பணியாற்றுகிறாள்; இவள் தலைவன் தலைவியின் காதல் வெற்றிக்காகவே படைக்கப்பட்ட பாத்திரமாகவும் தன் தலைவிக்காகவே இவள் வாழ்வதாகவும் படைக்கப்பட்டிருக்கின்றாள்; தலைவி மகப்பேறு பெறும் போது செவிலியாக மாறுகிறாள்; "தோழி எல்லா வகையிலும், தலைவிக்குச் சமமாகவே விளங்குகிறாள்; தலைவியினும் சிறப்புடையவளாய், அறிவும் ஆற்றலும் கொண்டிலங்குகிறாள். அவளைத் 'தாங்கருஞ் சிறப்பின் தோழி' என்று தொல்காப்பியரே உயர்த்திக் கூறுகிறார். அவள் தலைவியின் உயிர்த் தோழியாகவும் தலைவனுக்கு வழிகாட்டியாகவும் திகழ்கிறாள்"[4.] (4.சங்க இலக்கியங்களில் தோழி, முனைவர் சரளா இராசகோபாலன், ப.28). இவளது அறிவுச் சிறப்புக்கும் செயல்திறனுக்கும் சாதுர்யமான பேச்சுக்கும் எடுத்துக்காட்டாக நற்றிணையில் அமைந்த பாடலொன்றினைக் காண்போம்!

**வண்டு வந்தது ஏனடி தோழி ? :**

தலைவனது பிரிவால் மெலிந்த தலைவியின் உடல் நிலையினைக் கண்ட தாய் ஐயுற்று சில வினாக்களை எழுப்ப, அந்நேரத்தில் தலைவிக்குத் துணையாக நின்ற தோழி, தாயிடம் கூறிய செய்திகளைத் தலைவனிடம் கூறுகின்றாள்.

கலவியில் ஈடுபட்ட தலைவனும் தலைவியும் குன்றோரம் முகிலரண்டு ஒன்றானது போல் ஆகிவிட்டனர். 'பொறிகிளர் ஆகம் புல்லத் தோள்சேர்பு' எனப் புலவர் சங்கத் தமிழில் பொறித்தது போல இருவரும் புணர்வில் கலந்தனர். தலைவனை ஆரத்தழுவி அருவியோரம் நடந்ததொரு நிகழ்ச்சியால், அரிவையின் தோளில் வீசிய நறுமணத்தால் வண்டுகளும் அவளையே சுற்றிப் பறந்தன; இதனை உணர்ந்து கொண்ட தாயோ,

**"என்னடி பெண்ணே: சொல்லடி எனக்கு**

**உன்னடி தவறி எவன்மீது வீழ்ந்தனை"[5]**

**(5.சங்கத்தமிழ்,கலைஞர்,ப.108)** என்றாள். அன்னையின் ஐயத்தைப் புரிந்து கொண்ட தலைவியோ, வண்டுகள் மொய்த்ததால் காதற் கள்வனின் செயலை அன்னை அவள் கண்டு கொண்டாளோ? என்று நினைத்து,

**”பூச்செண்டுகள் இரண்டையும் துகிலால் மறைத்தாள்,**

**மண்டிய பற்குறி நகக்குறி தெரியாதிருக்க!”[6]**

**(6. மேலது, ப.108)**; என்று அச்சத்தால் பதில் ஏதும் சொல்ல முடியாமல் தடுமாறி நின்ற தலைவியின் நிலையினை எடுத்துரைத்தார்; தலைவியோ தாயின் வினாவிற்கு பதிலேதும் கூற முடியாமல் உதவிக்குத் தோழியைப் பார்த்தாள். தலைவியின் மனக்குறிப்பைப் புரிந்து கொண்ட தோழியோ, "அன்னையே அறியாமல் அவள் மீது பழி தூற்றுகின்றாய். அடுப்பினிலே சந்தன விறகுகளை வைத்து எறித்ததாலே, அந்த மணம் எங்கும் பரவியுள்ளது. அடுக்கடுக்காய் வண்டுகளும் அதனால்தான் பறக்குதம்மா! என்றாள்; மேலும் தலைவியின் கற்புத் திறத்தையும் எடுத்துரைத்தாள்;

“அன்னையே நீ ஐயுறுதல் போல நீ பெற்ற
அருமை மகள் ஆடவர் எவரையுமே ஏறெடுத்துப் பார்த்ததில்லை!
ஆணையிட்டுக் கூட நான் சொல்வேன்; அது தேவையில்லை
எனக் கருதுகின்றேன்! இந்த வீணையினை மீட்டுவதற்கு
உன் விழி மூலம் இசைவுதனைப் பெறுவதன்றி;
இவளைக் காதலிக்கும் திருமகன் இவள்மீது மறந்தும் கூட
கைகளையே வைப்பதற்கும் ஒப்பமாட்டாள்; இது உண்மை”[7] என்றாள்!

**(7.மேலது,ப.108)**; தாயாரும் தோழி கூறியதை ஏற்பதாக இசைவு தெரிவித்தாள்; அடுப்பின் நெருப்புத் தணலாலே சந்தன விறகுதான் மணக்குதென்றும் தங்க மகள் தவறொன்றும் செய்யமாட்டாள் என்றும் அங்கமெலாம் பூரிக்க அவள் உச்சி மோந்து முத்தமிட்டாள்! இவ்வாறாக தலைவியின் இல்லத்தில் நடந்த கதையினை தலைவியின் சொற்படி தோழிச் சென்று தலைவனுக்குரைத்து நின்றாள். இது போல எத்தனை நாட்கள் தான் உங்கள் களவுச் செய்தியை மறைக்க முடியும்? ஆதலால் விரைவில் வந்து தலைவியை மணமுடிக்க வேண்டுமென தோழி தலைவனிடம் உரைப்பதாக அமைந்த பாடல்,

**”உறுபகை பேணாது இரவில் வந்திவள்**

**பொறிகிளர் ஆகம் புல்லத் தோள் சேர்பு**

**அறுகாற் பறவை அளவில் மொய்த்தலின்” - (நற்றிணை: 55: 3-5 )**

என்பதாகும். தலைவன் தலைவியை மணப்பதாகக் கூறிய மொழிகள் பொய்யானதால், தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்து மீளவும் வந்தான். தலைவியை மணமுடிக்க

இனியும் காலம் தாழ்த்தக் கூடாது என்று தோழி உணர்த்த தலைவனும் அதற்கு இசைவளித்தான்; இக்கருத்தினைக் கலைஞர் தமக்கேயுரிய நடையில் கூறும் போது,

**"முல்லையிடம் கூறிவிடு; பெண் கேட்க நாளை என் பெற்றோர் வந்திடுவர்!**

**கொல்லை வழிச் சந்திப்பு எனும் தொல்லைக்கே இனி இடமில்லை!"[8]**

**(8. மேலது.பக்.109)** என்று தலைவனே உணரும்படி தோழி உணர்த்தினாள். தலைவியின் நல்வாழ்வில் முக்கியப் பங்கு தோழிக்கு உண்டு என்பதற்கு இப்பாடல் ஒன்றே சான்று பகரும்.

**வெறியாடும் வேலன் எதற்காக? :**

களவில் மனம் மகிழ்ந்து தலைவனிடம் தன்னை இழந்த தலைவி அவன் நினைவாகவே வாடிக் கிடந்தாள்; பசலையால் அவளது மேனியும் துவண்டது; பித்துப் பிடித்தவள் போல் இருந்த தலைவியின் நிலையைக் கண்ட தாய், வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்த வேண்டுமென நினைத்தாள்; வேலன் (பூசாரி) வந்து குறிச் சொன்னால் தலைவியின் உடல்நிலையில் மாற்றம் வரும் என தாய் நினைத்தாள். தலைவியோ, வேலன் வந்து குறிச்சொல்லி, தலைவனின் பிரிவுதான் இந்நிலைக்குக் காரணமென சொல்லி விட்டாள் தன் நிலை என்ன ஆகுமோ? என்று நினைத்தாள்; தாயானவள் வேலனை அழைத்து வரச் சொல்லி தோழியை ஏவினாள்; தலைவியோ தோழியைத் தடுத்து நிறுத்தினாள். தாயோ விடுவதாக இல்லை; தன் மகளுக்கு உற்ற துன்பந்தான் என்ன? இது என்ன மாயமென மனமுடைந்தாள்!

"பாயில் படுப்பதில்லை; பாலும் குடிப்பதில்லை; எந்தன் பாவைக்கு வந்தத் துயர் எனக்கொன்றும் புரியவில்லை" என்றாள். "நள்ளிரவில் நான் கண் விழித்துப் பார்க்கும் போதும் புள்ளி மயில் உறக்கமின்றி உரளுகின்றாள்! வெள்ளி முளைப்பதற்கு முன்பாகக் கண் மலர்ந்து துள்ளியோடும் மானாக இருந்த மகள், பறித்துப் போட்ட அள்ளித் தண்டு போல துவண்டு பாழும் தரையினிலே கிடக்கின்றாள்! வளைகின்றாள்! முற்றி விட்டதடி மருள் நோய் அவளுக்கு! அதனால் அவள் நோய் நீக்க வேலனை அழைத்து வருக" என்றாள்.

**"வேலன் வந்து என்ன சொல்வான்? விழியிரண்டை**

**விண்ணோக்கி மேயவிட்டு - வெடி முழக்க ஒலியெழுப்பி**

**வீணான ஆரவாரம் ஏராளமாய்ச் செய்து; துரும்பைத்**

**தூணாக ஆக்கித் தெய்வத்தின் சேட்டை யெனச் செப்பிடுவான்!"[9]**

(9.மேலது.ப.278) என்று வெறியாட்டு நிகழ்வைத் தோழி உரைக்கின்றாள். அதனால் தவைவனுடன் தலைவி கொண்ட நட்பைப் பற்றி தாய்க்கு உரைப்பதே நன்று எனத் தோழி உரைத்தாள். இக்கருத்தினைப் புலவரின் சிறந்த உவமை வாயிலாகக் கலைஞர் எடுத்துரைக்கின்றார்.

**”மேழிபட்டு மேலே வரும் அடிமண்ணைப் போல் காமமெனும்**

**ஊழித் தீ வாட்டுகின்ற உண்மை ஒருநாள் வந்தே தீரும்! அதனாலே**

**கோழிச் சிறகுக்குள் குஞ்சைப்போல் ஒளிக்காதே காதற் களவியலை”[10]**

(10.மேலது.ப. 278) என்றாள்.

**“வெறியாடி நோய்த் தீர்க்கும் வேலனாம் பூசாரி தேவையில்லை;**

**நெறியோடு மணம் புரிய விழைகின்ற வீரனொருவன் மீது**

**குறியாக இருக்கின்றாய் நீ! என்ற இரகசியத்தை**

**அறியாது புலம்புகின்ற அன்னைக்கு உணர்த்திடுவோம்!**

**மையுண்ட ஆய்மலர்க்கண் பசலை நிறம் படர**

**மனம் கவர் சேய்மலை நாடன் செய்த நோய் இதுவென்று**

**கைவளையல் எல்லாமே கழன்று விழுவதற்கு முன்பு**

**கண்டிப்பாய் அன்னையிடம் சொல்லிவிடல் நன்று”[11]**

(11.மேலது.ப.278) என்றாள். இவ்வாறாகத் தோழி தலைவியின் களவினைத் தாயிடம் சொல்லி விடுவது நல்லது என்றுரைத்தாள். இதனை,

”அறியாமையின் 'வெறியென மயங்கி

அன்னையும் அருந்துயர் உழந்தனள்; அதனால்

எய்யாது விடுதலோ கொடிதே – நிரையிதழ்

ஆய்மலர் உண்கண் பசப்பச்

செய்மலை நாடன் செய்த நோயே!” - (ஐங்குறு.242)

என்னும் பாடல் வாயிலாக கபிலர் உணர்த்துகிறார்.

**அன்னிமிஞிலி :** முத்தமிழறிஞர் கலைஞர் காதல் கவிஞன் மட்டுமல்ல! வரலாற்றையும் படம் பிடித்துக் காட்டும் வரலாற்றாசானும் கூட! அந்த வரிசையில் அன்னிமிஞிலி என்பாளின் சூளுரையும் கோசர்களின் இழிகுணத்தையும் சங்க அகப்பாடல்களின் வழி எடுத்துரைக்கும் பாங்கு சிறப்புக்குரியது. 'அன்னி' என்றும் 'மிஞிலி' என்றும்

அழைக்கப்பட்ட தமிழ் வீரர்கள் இருவரைப் பற்றியும் 'கோசர்' குடியினரைப் பற்றியும் பின்வரும் பாடலால் (அகம்.252) அறியலாம்.

'அன்னி' மற்றும் 'மிஞிலி' என்னும் இருபெரு வீரர் பெயர்களையும் இணைத்து 'அன்னி மிஞிலி' என பெயர் கொண்ட அழகு நங்கை ஒருத்தியை எடுத்துக்காட்டுகிறது. இவள் அமர்க்களத்தில் உயிர் நீத்த 'அன்னி யெனும் வீரன் போல் அனல் உமிழும் கற்புடையவள்! 'ஆய் எயினன்' என்னும் வீரனை வென்று வீழ்த்தி நன்னனது ஊரினையும் தனதாக்கிக் கொண்ட 'மிஞிலி' எனும் வீரனைப் போல் உறுதி மிக்கவள்; 'கோசர்' சிலர் இவளைப் பெண் கேட்டு வந்தனர்; இவள் தந்தை பெண் தர மறுத்து விட்டார். பெண் கேட்டு வந்த கோசர்களை எச்சரித்த தந்தையாரோ, தன் மகளின் காதல் 'திண்தோள் திதியன்' மீதே என்பதையும் உணர்ந்து, இக்காதல் செய்தியைக் கோசர்களிடம் கூறி அவர்களை எச்சரித்தார்.

தான் பெண் கேட்டு தர மறுத்த 'அன்னிமிஞிலி'யின் தந்தையைக் கொல்ல வேண்டுமென கோசர்கள் திட்டம் தீட்டினர். "வாய்மை நிறைக் கோசரிலும் வன்நெஞ்சம் கொண்டோர் சிலர் வாழ்ந்திருந்தனர்"[12] (12.மேலது,ப.252) என்பதால் கோசர் என்னும் அரச பரம்பரையின் சிறப்பினைக் கலைஞரின் கவி நடையால் அறிய முடிகின்றது.

பயற்றம் பயிர் விளையும் பாங்கான நிலங்கள் பல நியமத்தில் நிலைத்திட்ட கோசர்க்கு உரிமைச் சொத்தாக இருந்தது; அன்னிமிஞிலிக்கோ பசு ஒன்றே குடும்பச் சொத்தாக இருந்தது; பயங்கரமான திட்டம் தீட்டி அன்னிமிஞிலியின் பசுவை, நல்ல விளைச்சல் உள்ள கோசரின் நில வயலில் மேய விட்டு, தங்களுடைய நிலத்தைப் பாழாக்கிய பசுவைக் கண்டிக்க வேண்டுமென கோசர்களின் ஊர் மன்றத்தில் தீர்ப்பும் வழங்கப்பட்டது. பசுவைக் கண்டிக்காமல் பசுவை வளர்த்தவனின் இரு கண்களையும் குத்தி அவனைக் குருடாக்க வேண்டுமென தீர்ப்பு வழங்கி, அன்னி மிஞிலியினுடைய தந்தையின் கண்களைக் குருடாக்கினர்; தன் தந்தைக்குக் கோசர்களால் இழைக்கப்பட்ட கொடுமையினை எதிர்த்த அன்னி மிஞிலி சூளுரைத்தாள்.

**”உயிர் போன்ற தந்தையினைக் குருடாக ஆக்கியவர் தம்**

**உயிர் போகுமட்டும் நான்**

**உண்கலத்தில் உண்ண மாட்டேன்;**

**உடை மாற்றம் செய்ய மாட்டேன்:**

**பழி வாங்கித் தீரும் வரை பசி தூக்கம் எதுவுமில்லை?**

**பகை முடிப்பேன் பார்வையிழந்த தந்தைக்குப்**

**பலி கொடுப்பேன் எதிரிகளை!”[13]**

**(13.மேலது.ப.255)** என்னும் அன்னி மிஞிலியின் சூளுரை அவளது காதலனாகிய திண்தோள் திதியனுக்கு எட்டியது. "கண்ணுக்கு இனியவளே! என் கருத்துக்கு ஏற்றவளே! உன் இதயப் புண்ணுக்கு மருந்திட வகையறியேன்" என்று நொந்தான். கண் குத்திப் பாம்புகளைத் துண்டாடும் கீரியைப் போல திண்தோள் திதியனைத் தேடி வந்ததாகவும், தன் தந்தையைக் குருடாக்கிய கோசர்களைப் போரில் எதிர்த்து நின்று கொன்று தன் பகையைத் தீர்க்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டாள்.

திதியனோ, "உன் தந்தையாம் என் மாமனுக்கு ஊனம் விளைவித்தோர் உயிர் போக்கித் திரும்பிய பிறகே உனைத் தீண்டும் என் கரங்கள்!" எனச் சூளுரைத்து வாளேந்திப் புறப்பட்டான்! போர்ப்படைக் கிளம்பிற்று! பொல்லாக் கோசர் உடலும் நொறுங்கிற்று! நில்லா நெடுஞ்சுவர் போல் வீழ்ந்து இறந்தார்; விரும்பியவாறு சூளுரை முடித்தாள்; திரும்பிய திதியனின் தோளில் சாய்ந்தாள்! அரும்பியக் காதல் அன்றே மலர்ந்தது! இக்கருத்தினை அகநானூற்று பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. அப்பாடல்,

”வாய்மொழித் தந்தையைக் கண் களைந்து, அருளாது.

ஊர்முது கோசர் நவைத்த சிறுமையின்,

கலத்தும் உண்ணாள், வாலிதும் உடாஅள்

சினத்தின் கொண்ட படிவம் மாறாள்

மறம்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்,

செருஇயல் நல்மான் திதியற்கு உரைத்து, அவர்

இன்உயிர் செகுப்பக் கண்டு சினம் மாறிய

அன்னிமிஞிலி” - (அகநானூறு:262)

என்னும் பாடலடிகளால் திதியனின் வீரத்தையும், கோசர்கள் என்னும் மரபினரைப் பற்றியும் 'அன்னிமிஞிலி' என்ற பெண்ணின் வரலாற்றையும் அப்பெயருக்கான காரணங்களையும் அறிய முடிகின்றது.

**அன்னை கூறினள் புன்னையது சிறப்பே! :**

தாவரங்களுக்கும் உயிருண்டு என்னும் அறிவியல் செய்தியினை எடுத்துரைக்கும் அகப்பாடல் ஒன்று நற்றிணையில் பாடப்பெற்றுள்ளது. வெள்ளரிக்காய் விதை போலச் சிரிக்கும் பல்லழகும், பூவின் கள் இனிக்கும் விதம் போல மழலைச் சொல்லழகும் கொண்டு வெண்மணற் பரப்பில் ஒரு செந்தமிழ்ச் செல்வி கண் மலர் மூடிக் கைமலர் கொண்டு, புன்னைக் காய்களைப் புதைத்து விளையாடி, அவற்றில் ஒன்றை மறந்து ஆங்கு விட்டுச் சென்றிட, அது கன்றாய் வளர்ந்து இள மரமாய்ச் செழித்தது! தான் உண்ண மறுத்த நெய்யும் பாலும் அப்புன்னையின் வேரில் பெய்து வளர்த்தாள் பேரழகுப் பதுமை ஒருத்தி! அன்னை வளர்த்ததோ அழகு மகளை! மகளோ புன்னை வளர்த்துப் பூரிப்பு கொண்டாள். இதனைக் கண்ட தாய், உன்னுடன் சேர்ந்து வளர்ந்து உயர்ந்து நிழல்தரும் புன்னை, உந்தன் இளைய உடன்பிறப்புப் போன்றது என்றாள். இவ்வாறு வளர்ந்த குலக்கொடி இவளை நெய்தல் நில தலைவன் ஒருவன் காதலால் ஆட்கொண்டான். இருவரும் புன்னை மரநிழலில் சந்தித்த வேளையில், ”இங்கு வேறெதுவும் வேண்டாம் அத்தான்; என் தங்கையொருத்தி பார்த்துக் கொண்டிருக்கிறாள்” என்றாள்.

”புன்னை இளம் மரமிதனை நான் வளர்த்ததாலே;
என்னோடு சேர்ந்து வளர்ந்த இந்தப் புன்னையினை – என்
தங்கையைப் போல் நினைக்குமாறு – என்
தாய் எனக்குக் கூறியுள்ளாள்; அதனாலே,
தட்டாதீர் என் பேச்சை – தழுவாதீர் இங்கென்னை!
கட்டாணி முத்தேயென்று கற்கண்டுப் பொடி தூவாதீர்!”[14]

(14.மேலது, ப.210) என்றவள்,

” நான் வளர்த்த இத்தங்கையின் முன்னே – எனை
நாணம் வந்து தடுப்பதாலே,
வான் பொழியும் ஒளி மழையில் – இன்பத்
தேன் பொழியும் திருவிழா நாம் நடத்துதற்கு
வேறு மரநிழலொன்றைத் தேடிச் செல்லலாமென
ஏறு போன்றான் தோளைப் பற்றி
வீணையிசைப் பேச்சுக்காரி இழுத்துச் சென்றாள்”[15]

(15.மேலது,ப.210) என்று நற்றிணைப் பாடலின் சாரத்தை அழகிய காதல் வடிவினில் படைத்தளிப்பது கலைஞருக்கேயுரிய சிறப்பு. அப்பாடல்,

”விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
ஐநெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்த்தது
நும்மினும் சிறந்தது; நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது நலனே
அம்ம நாணுதும், நும்மோடு நகையே” – (நற்றிணை.172)

என்பதாகும். இப்பாடலின் விளக்கத்தை பாமரரும் அறியும்வண்ணம் அழகிய எளிய கவிதை நடையில் தெள்ளுத் தமிழில் அளித்திருப்பது, சங்கக் கவிதையை உலகெங்கும் எளிமையாக உணர வழிச் சேர்க்கும் என்றால் அது மிகையல்ல. கலைஞரின் மொழிநடைக்கும் அவருடைய தமிழாளுமைக்கும் அவருக்கு நிகர் அவர் மட்டுமே! என்பது மேற்கண்ட எடுத்துக்காட்டுகளால் அறிய முடிந்தது.

**முடிவுரை:** அரசியல் தளங்களில் போராட்டக் களங்களில் நின்று அயராது உழைத்த பெருமகனாரின் பெருவாழ்வு அனைத்தும், தமிழன்னையின் மடியில் தன்னை குழந்தையாக பாவித்து இளைப்பாறியதைக் காணும் பொழுது பெருமகிழ்ச்சி எய்துகிறது.

“ அறிஞர் அண்ணாவின் வழி வந்த பாவலன்!
நாடு போற்றும் நற்றமிழனின் காவலன்!
செந்தமிழ் பேசும் அண்ணாவின் செந்நாவும்
பைந்தமிழ் பேசும் கலைஞரின் பேனாவும்
படைக்காத பொருளில்லை அவனியிலே”

இருக்கின்ற அவசரமான காலகட்டங்களில் ”எனக்கு நேரமில்லை!” என்று கூறுவோர், தலைசிறந்த அரசியல் தலைவர்களாக விளங்கிய அறிஞர் அண்ணா, கலைஞர் போன்றோரின் மொழித்திறனையும் கலையார்வத்தையும் முன் உதாரணமாக எடுத்து செயல்பட்டால் நம்மாலும் பல துறைகளில் சிறந்தோங்க முடியும் என்பதற்கு இக்கட்டுரை மிகச் சிறந்த சான்றாகும். மிக்க நன்றி!

**துணைநூற் பட்டியல் :**


- சங்கத் தமிழ், கலைஞர் மு. கருணாநிதி,திருமகள் நிலையம், சிவப்பிரகாசம் சாலை, தி.நகர், சென்னை-17. ஆறாம் பதிப்பு -2017.

- சங்க இலக்கியம், நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு - மூலமும் உரையும், முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன் (உரை), நியூ செஞ்சுரி புக் அவுஸ்(பி)லிட், சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 98. மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி, 2007.
- சங்க இலக்கியங்களில் தோழி, முனைவர் சரளா இராச கோபாலன், அன்பு பதிப்பகம், டாக்டர் ரங்கா சாலை, சென்னை-18. முதற் பதிப்பு, டிசம்பர், 2012.